மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வரி கட்டாது இருந்த காலத்திற்கு வரி வசூலிக்கப்பட மாட்டாது. இந்தப் பசலியிலிருந்து கணக்குக்கு வரும். பழைய வரியை வசூலிக்க மாட்டோம். இதிலே அரசாங்கத்திற்கு எவ்வளவு வரி வருகிறது என்பது முக்கியமல்ல. தமிழ்நாடு முழுவதும் பல ஜில்லாக்களில் இந்த முறை இருக்கிறது. சேலம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பல மாவட்டங்களில் இருக்கின்றன. அவற்றை எடுத்துவிடத்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே பணம் முக்கியமல்ல, கொள்கைதான் முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை, திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Bill, 1972, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended was passed, into law.

(ஏ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு) எண் 50/72)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1972) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

---

* 8—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1972 டிசம்பர் 12] [திரு. ப. உ. சண்முகம்]

குதிரைப் பந்தய வரிக்கு மேல்வரி விதிக்க வகை செய்வதற்காக தமிழ்நாடு 1935-ம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 20/1935), தமிழ்நாடு 1972-ம் ஆண்டு 44-வது சட்டத்தால் 1971-ல் திருத்தப்பட்டது. மேல்வரி 1972 ஜனவரி 1-ம் நாளிலிருந்து விதிக்கப்பட்டுள்ளது. "பந்தய கணிப்புப் பொறி வரி" (totalizator tax) மீது மேல்வரி விதிப்பதற்கு 1971-ம் ஆண்டு சட்டம் வகை செய்யவில்லை. ஆனால், "பந்தய கணிப்புப் பொறி வரி" மீதும் 1972-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாளிலிருந்து மேல்வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறு வசூல் செய்ததற்கு செல்திறன் அளிக்கப்பட வேண்டியிருந்தது. மற்றும், "பந்தய கணிப்புப் பொறி வரி"க்கும் தொடர்ந்து மேல்வரி விதிக்கப்பட வேண்டுமென்பது தான் குறிக்கோள். எனவே, இக்குறிக்கோளுக்கிணங்க, சட்டத்தை ஏற்றவாறு திருத்துவது அவசியமெனக் கருதப்பட்டது. மேற்கண்ட குறிக்கோளை எய்துவதற்காக தமிழ்நாடு 1972-ம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1972) 1972 நவம்பர் 21-ம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது.

அவையின் முன்னுள்ள இச்சட்ட முன்வடிவு, சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் மேற்சொன்ன அவசரச் சட்டத்தை ரத்து செய்ய விழைகிறது.

தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை இப்பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir I move—

"That the Tamil Nadu Betting Tax (Second Amendment) Bill 1972 be passed.

The motion was put and carried and the Bill was passed.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.57 மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders

'Nil'

B. Reports, Notifications and Other Papers.

@ 28. The Mettur Township, Courtallam Township and Bhavanisagar Township (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 49 of 1972).

@ 29. Annexure to the Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 48 of 1972).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATURE
FEB 1973
MADRAS

---

@ Despatched to Members on 9th December 1972.